## திருவண்ணாமலை மாவட்ட நலப்பணிகள் இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

**முன்னிலை:- மரு.இ.யாஸ்மின், MBBS.,DGO.,**

ந.க.எண். 4785/நி2/2020 நாள் 07.01.2022

பொருள்: நிர்வாகம் – நேரடி நியமனம் திரு. மு. ராஜாமுகமது, இளநிலை உதவியாளர், நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகம், திருவண்ணாமலை – தற்காலிக பணிகள் 23.09.2020 முற்பகல், பணிவரன் முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை:
1. செயலாளர் தமிழ்நாடு தேர்வாணையக்குழு அவர்களின் கடிதம் எண்.2383/PSD-12/2020, நாள்.21.07.2020.
2. இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், சென்னை–6, அவர்களின் கடிதம் ந.க.எண்.31495/நி2/2/2020, நாள்.25.08.2020
3. திருவண்ணாமலை, நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகம் பணிநியமண ஆணை ந.க.எண்.4785/E2/2020-1, நாள்.14.09.2020
4. தனியர் பணிசேர் விண்ணப்பம். நாள்.23.09.2020

••••••••

பார்வை 1–இல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கடிதம் மூலம் பார்வை 2 –இல் காணும் இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், சென்னை–06 அவர்களின் பணிஒதுக்கீட்டின் ஆணை மற்றும் பார்வை 3–இல் காணும் இவ்வலுவலக பணிநியமன ஆணையின்படி திருவண்ணாமலை மாவட்டம், நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக தமிழ்நாடு அமைச்சுப்பணியாளர்(பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 7(5) கீழ் நியமனம் செய்யப்பட்ட கீழ்காணும் இளநிலை உதவியாளரின் தற்காலிக பணிகள் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் பதவி மற்றும் பணி புரியுமிடம் | தற்காலிக பணியில் இளநிலை உதவியாளராக பணியில் இணைந்த நாள் | பணிவரன் முறை செய்யப்பட்ட நாள். |
|---|---|---|---|
| 1 | **திரு. மு .ராஜாமுகமது** இளநிலை உதவியாளர், நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகம், திருவண்ணாமலை. | 23.09.2020 முற்பகல் | 23.09.2020 முற்பகல் |

இவர் தமது தற்காலிக பணிகள் வரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டாண்டு காலத்திற்கு தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். இப்பருவத்தை இவர் தமது மூன்றாண்டு தொடர் பணிக்காலத்திற்குள் நிறைவு செய்திட வேண்டும் என ஆணை வழங்கப்படுகிறது.

மேலும் இப்பணியாளர் தமிழ்நாடு துறை அலகு தேர்வான TamilNadu Medical code மற்றும் பவானிசாகர் அடிப்படை பயிற்சியினை தமது இரண்டாண்டு பணிக்காலத்திற்குள் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது

இந்த பணி வரன்முறை ஆணையானது Combined Civil Service Examination Group IV 2018-2019, மற்றும் 2019-2020-ம் ஆண்டின் தேர்வு செய்யப்பட்டவர் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் / மதுரை கிளையில் நிலுவையிலுள்ள வழக்குகளின் தீர்ப்புகளுக்கு உட்பட்டது.

நலப்பணிகள் இணை இயக்குநர்,
திருவண்ணாமலை.

7/1/2022

பெறுநர்

திரு. மு. ராஜாமுகமது,
இளநிலை உதவியாளர்,
நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகம்,
திருவண்ணாமலை. உரிய வழியாக)

நகல்: சம்பளப்பட்டி உதவியாளர், நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகம்,
திருவண்ணாமலை (உரிய வழியாக).

நகல்:- அலுவலக ஆணை புத்தகம் / பணிப்பதிவேடு / இருப்பு கோப்பு / தனி .

**நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.**
இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், சென்னை-06.